
திருச்சிற்றம்பலம்

# ஆனந்தநடராஜர்பேரில் அற்புதக் குமிற்பண்

வண்டிப்பண் பாங்கிப்பண் முதலிய பல பண்கள்

பஜனோபகாரமான நலங்கு லாலி

பத்தியம் நாமாவளிமுதலிய பாத்துறைகள்.



இவை

சிதம்பரம் புதுத்தெருவில் வசிக்கும்

சுப்பராயர் குமாரர்

**அண்ணுசாமி ஐயரவர்களால்**

இயற்றி

பிரம்மவித்தியா அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

---


**CHIDAMBARAM.**

விகிர்தி ௵ மிதுனரவி

கணபதிதுணை.

# ஸ்ரீ ஆனந்த நடராஜர் பேரில் குயிற்பண்.

எல்லார்க்குநல்லாண்டி குயிலே என்பெருநாயகனடி
சொல்லாதுஞ்சொல்லுவண்டி குயிலே சுவபஞ்சோதியானவனடி க.
நான்மறைபாடுவதுங்குயிலே நாரணர்தேடுவதும்
வான்பெருவள்ளலையே - குயிலே வாயாரவாழ்த்தடியோ உ.
அம்பலவாசனடி - குயிலே அம்பிகைநேசனடி
தம்பதங்கண்டவரை - குயிலே தானாகச்செய்வனடி ௩.
நம்மையழைப்பாண்டி - குயிலே நற்சுகந்தருவானடி
அம்மையப்பனடி - குயிலே அன்றெனையாண்டவண்டி ௪.
ஆறாறுமானவனுங் - குயிலே அதற்கப்பாலானவனுந்
நீறாருமெய்யனென்றே - குயிலே நித்தியம்போற்றடியோ ௫.
ஐயுருவானவனுங் - குயிலே ஐம்பூதமானவனுந்
தையலோர்பங்கனென்றே - குயிலே தனித்துநீபோற்றடியோ ௬.
தாண்டவமாடுவண்டி -குயிலே தானாகக்கூடுவனடி
பாண்டியநாட்டிலவந்த - குயிலே பார்புகழ்சித்தனடி ௭.
சித்தாகுந்தேகனடி - குயிலே சிற்சபைமோகனடி
பித்தாகுஞ்செய்கையனாக் - குயிலே பிரியாதசுத்தனடி ௮.
சிரவணாதிவேணுமடி - குயிலெ சின்மயமாவதற்கு
வினைவினிற்பண்ணடியோ - குயிலே விசுவமுநீயாவாய் ௯.
தத்துவசோதனையைக் - குயிலே தனித்துநீசெய்குவையேற
றத்துவாதீதனாகி - குயிலே தழைத்துமேநிற்பாயே ௰.
சாதுக்கட்கூட்டத்திலே - குயிலே சந்ததநின்றுநீயே
போதமயமாகி - குயிலே பொருந்துவாயிப்போதே ௰க.
தேகமிருக்கையிலே - குயிலே தேவனைக்காணவேணும்
மோகங்கணீங்கிநின்றாற் - குயிலே மோக்ஷமாமிப்போதே ௰உ.
என்னதான்சொன்னாலுங் - குயிலே யென்மொழிகேளாயே
உன்னையல்லாலெனக்குக் - குயிலே உற்றார்களாரடியோ ௰௩.
எங்கெங்கேபார்த்தாலுங் - குயிலே எகதையையல்லாம
லங்கங்கேவேறுமுண்டோ - குயிலே ஆராய்ந்துபாரடியோ ௰
ஆதாரமாறையுமே - குயிலே அன்பாகப போற்றிநின்று
லாதாரமின்னதென்றே - குயிலே அறிந்துநீவாழலாமே.

முற்றும்.

# ஓ ர டி க் கு ம் மி.

## சகிநாயகி பிரசனோத்திரம்.

---

பாமதியனையமாமுகத்தாளுன்னை மகிழ்ந்துவணைந்தவராரோடி
சேமயபாலிக்குஞ்சிற்சபைநின்றுடுஞ்செல்வரோயெந்தன்மணாளரடி. ௧
பாரிற்புகழ்பெறுமடைநதொடியேயுனைப்பரிந்துகலந்தவராரோடி
ஆருழறியொணுவம்பலத்தேயமரானந்தரூபமுக்தரடி. ௨
பங்கயநூலொத்தசிற்றிடையாயுனைப்பாசமாய்ச்சேர்ந்தவராரோடி
தங்கக்கொடியுமைதன்னைப்புணர்நதிட்டதாங்குகங்கைச்சடையரடி. ௩
தோடமிலாதநற்றோகைநல்லாயுனைத்தோயந்துமகிழ்ந்தவராரோடி
பாடற்கிசைந்துபரிசுவளித்திடும் பாராளுமிராஜபூஜ்ஜியரடி. ௪.
உவமையிலாதபெணமாமணியேயுனைபுகந்துமணஞ்செய்தாராரோடி
நவமெனுநதத்துவமீதினில்வாழ்நதிடுநாயகரொன்னுயிர்நாதரடி. ௫.
வனனச்செபபமர்வார்முலையாயுனைவாவென்றழைத்தவராரோடி [ரடி.
பொன்னம்பலமெனும்பொதுவினினின்றுடும்போாத்தகரித்தோற்பித்த
தேனுரமென்மொழிக்கோகிலமேயுனைத்தேடியாட்கொண்டவராரோடி
வானுந்தேவர்க்குவாழ்முதலாகியவான்சபைநின்றுடுமவள்ளலடி. ௭.
கற்கண்டனைய சொற்காரிகையேயுனைகலந்துபுணர்ந்தவராரோடி ௮.
தாருகங்களவிட்டநழைத்தமெய்ஞானியாய்த் தானின்றியங்குநதற்பரண்
காரிறமபோன்றநற்கூநதனல்லாயுனைக்கருதிக்கலந்தவராரோடி
காரிறவணனனுங்காணற்கரியவெங்கண்ணனடி மூன்றுகண்ணனடி. ௯.
முலலையரும்பமபலலுடையாயுனைமுத்தமிட்டாண்டவராரோடி
தில்லைபதியினிற்றுணடவஞ்செய்திடுநிகழுறுந்தெய்வநடத்தனடி. ௰
முற்றும.

---

## வ ள ளி பா ட ல்.

### நாயகபிரதாபம்.

---

கணவனடி கணவனடி கிடைக்கரியகணவனடி
கணடோர்கடமமனைதகளைக்குநல்லகணவனடி
உணடாற்பசிதீருமென்பாருத்தமர்களிவ்வுலகில
கடாற்பசிதீருமடிகணவனிடமேனிதனை
தெத்தாளமுருகுறிப்பறியுங்கண்ணழகும்
சியெனுறுசொல்லுமபயகரப்பேரழகும்

மாயையின்மேலூன்றிநிற்குமாமலரின்னல்லழகும்
மாதாசுபாதியோங்கும்மாவடிவச்சீரழகுங்
காணலாமேகாணலாமேகணவனிடம்போவோமானால்
காதன்மிகவுடையனடிகாக்கும்வெள்ளச்சடையனடி
பேதமொன்றுமில்லானடிபேதையற்குநல்லானடி
போதத்தலத்துள்ளானடிபோற்றுவோரைவிள்ளானடி
நலலனடிநல்லனடிஞானசபைநல்லனடி
நத்துமன்பர்தங்களுக்கேநடித்தருளும்வல்லனடி (கணவனடி)

வேறு பண்.

தன்னாநன்னாதன்னாநன்னா-தனனாநன்னானே
தானநன்ன நனனாநன்னநனனாநன்னானே

இன்னுமமறைதேடிக்காணாவெந்தன்னாதனை
யின்னுமவரக்காணேனடியென்னநான்செய்வேன் (க)
அநதமாதியொன்றுமிலலாவுநதன்சாமிதான்
வந்துவுனைச்சேரானோடிவாதேண்டிமானே. (உ)
பஞ்சகோசநதன்னைத்தாண்டிநின்றநாதன்
பந்தைபடுப்பாட்டைக்கணடுவெருவானோமானே (ங)
அத்தனென்றேமுத்தாபுகழுநதன்சுத்தன்றான்
பத்தாசூழநித்தமவந்துமுத்தன்றன்றருவார் (ச)
காரணிக்கண்டன்வந்துகாப்பானோவென்னை
வாரணிகொங்கைவாழவருவானடிபெண்ணே. (ரு)

தன்னானேதானானேதானானேதானனனதனனானதானனநனனானன.

வேறுபண.

க. சின்னச்சிறுவயதிற்சிங்காரமாக
சிறந்தணைந்தானெந்தனுயிர்நாதனடி

உ. தாணடவமாடிதானருஞனக்கூடுவேணடி
தனித்திலலைவாழுபெநதன்சாமியடி

ங. அன்பாகளெல்லோருமன்றடைந்தாரங்கே
யவனியில்வீணாய்நானானேனடி

ச. துன்பங்களெலலாந்துடைத்தென்னைக்காபபனடி
துரியநடப்புரியுமெந்தன்றாயனடி

அன்பனடி அன்பனடி அன்பாகளன்பனடி
எனபருவங்கண்டெனக்கேயின்பளிக்குமின்பனடி.

## பாங்கிப்பண்.

க. அத்தனிடம்போவாயோ - ஏசின்னப்பாங்கிநீ
அந்தரங்கஞ்சொல்வாயோ - ஏசின்னப்பாங்கி
உ. அம்பலத்திற்செல்லும்போதே - ஏசின்னப்பாங்கி நீ
அன்பாகச்செல்லடியோ - ஏசின்னப்பாங்கி
ந. துன்பமெல்லாங்கண்டுரைத்தே - ஏசின்னப்பாங்கி நீ
துரியசுகந்தருவாயோ - ஏசின்னப்பாங்கி
ச. குஞ்சிதமாந்தாளழகை - ஏசின்னப்பாங்கிநீ
குறிப்பாகப்பாரடியோ - ஏசின்னப்பாங்கி
ரு. என்றுவருவாயோ - ஏசின்னப்பாங்கி நீ
எந்தையுடன்னீயுமே - ஏசின்னப்பாங்கி
சு. பாட்டுக்கிசைவானா - ஏசின்னப்பாங்கிநீ
பக்கத்திற்சேர்த்துவைப்பாய் - ஏசின்னப்பாங்கி
எ. வேதப்பரியேறிவந்தே - ஏசின்னப்பாங்கிநீ
வேதனையைத்தீர்க்கச்சொல்லாய் - ஏசின்னப்பாங்கி
அ. நால்வர்காணவந்தவனை - ஏசின்னப்பாங்கிநீ
நானுங்காணவரச்சொல்லாய் - ஏசின்னப்பாங்கி
கூ. சித்துருவமாகியபின் - ஏசின்னப்பாங்கிநீ
சிவமாகவாக்கிவைப்பாய் - ஏசின்னப்பாங்கி
க0. அரியயற்குமறியானை - ஏசின்னப்பாங்கிநீ
அணைந்துசுகம்பெறச்செய்வாய் - ஏசின்னப்பாங்கி.

## வண்டுப்பண்.

### பிரமராஷ்டகம்

க. நாதாந்தநாட்டானென்றூதூதுவண்டே
ஞானநடத்தோனென்றூதூதுவண்டே
வேதாந்தவீட்டானென்றூதூதுவண்டே
வேதமொழிந்தோனென்றூதூதுவண்டே
உ. மாயவற்கெட்டானென்றூதூதுவண்டே
மாதொருபாகனென்றூதூதுவண்டே
தாயினினியனென்றூதூதுவண்டே
தாண்டவமாடியென்றூதூதுவண்டே

௩. நீலநற்கண்டனென்றூ தூதுவண்டே
நீள்விசும்பானேனென்றூ தூதுவண்டே
காலனைக்காய்ந்தோனென்றூ தூதுவண்டே
காலங்கடந்தோனென்றூ தூதுவண்டே

௪. அன்பருக்கன்பனென்றூ தூதுவண்டே
அத்வீதரூபனென்றூ தூதுவண்டே
துன்பந்துடைப்போனென்றூ தூதுவண்டே
துரியத்தலத்தோனென்றூ தூதுவண்டே

௫. அன்றெனையாண்டானென்றூ தூதுவண்டே
அபயமளித்தானென்றூ தூதுவண்டே
மன்றிநடிபபோனென்றூ தூதுவண்டே
மதியணிநாதனென்றூ தூதுவண்டே

௬. குஞ்சிதபாதனென்றூ தூதுவண்டே
குற்றம்பொறுப்பானென்றூ தூதுவண்டே
அஞ்செழுத்தானேனென்றூ தூதுவண்டே
அம்பலத்துள்ளானென்றூ தூதுவணடே

௭. ஆரூரர்க்காளானென்றூ தூதுவண்டே
ஆநந்தமேலானென்றூ தூதுவண்டே
பேரூரின்வாழ்வாமென்றூ தூவண்டே
பேராப்பெருமையென்றூ தூதுவண்டே

௮. நித்தியானந்தனென்றூ தூதுவணடே
நிர்மலரூபனென்றூ தூதுவணடே
பத்திக்கிசைவானென்றூ தூதுவணடே
பரசுகநாதனென்றூ தூதுவண்டே

நானை நன்னை நனனநனனநன்னைநானை

அழகனடி அழகனடி ஆனந்தவழகனடி
பழகுமனபாதங்களுக்கேபரமசுகமளிப்பானடி
என்னடியென்கணவன்யென்குணத்தானென்றுமுள்ளான்
தன்னைநம்புவார்க்குத்தன்பதமேதந்திடுவான்
ஆணவங்கட்கொண்டவர்க்குஅகப்படாண்டியென்னையன்
காணவவாவுள்ளவர்கட்கருத்திருந்துவாழ்வான்டி நானைநன்னைன
அன்பனடி அன்பனடி அன்பாகளன்பனடி
என்பருவங்கண்டெனக்கே இன்பளிக்குமின்பனடி.

## வேதாந்த தெம்மாங்கு.

---

௧. அஞ்சுடனேஒன்றுகுமந்தகனைச்சேர்ந்துவினனுள்
பஞ்சுபடாபாடனைத்தும்பட்டேண்டிபார்தனிலே
௨. பாரதனிலேயின்பமென்றுபாவித்துவாழ்ந்ததல்லால்
ஓரொடியுமின்பமதையோர்நாளுங்கண்டதிலலே
௩. கண்டதெல்லாம்பொய்யாச்சேகண்டவர்சொல்மெய்யாச்சே
தொண்டருடன்கூடியினிச்சுகம்பெறுகவருவாயோ
௪. வருவாயோவுண்மணியேவாதொன்றும்பேசாதே
தருவேண்டியுன்றனக்குத்தற்பரமாமபெருவாழ்வை
௫. வாழ்வெல்லாம்வந்திடுமேவான்சபையைக்காண்குவையேல்
தாழ்வெல்லாந்தாழ்ந்திடுமேதனியரசுப வாய்ந்திடுமே
௬. வாயாரவாழ்த்துதற்குவண்மைபுள்ளதெய்வமடி
தாபரிலிமிக்கவனைபத்தநாளுந்தத்துவஸ்டி
௭. தத்துவமெல்லாமதாறெடுங்குமத்தலத்தே
சித்துருவாய்நின்றுடுஞ்சிற்சபைவாழ்செலவனடி.

---

## நலங்கு.

௧. ...டமையாங்தாளமுகா நலங்கிடவாரும்
...ளிமைபாபுள்ளராஜாவே - நலங்கிடவாரும்
௨. அன்பாபுகழ்அற்புதரோ - நலங்கிடவாரும
ஆசையுள்ளதேஜரோ - நலங்கிடவாரும
௩. புவிபாளவந்தோரோ - நலங்கிடவாரும
பூங்கமழ்டான்றநத்தாரோ - நலங்கிடவாரும்
௪. காணுங்கணணுக்கினியரோ - நலங்கிடவாரும்
காதன்மிகவுடையரோ- நலங்கிடவாரும.

## லாலி.

௧. தேவலாலிமகாதேவலாலிதேவசபைவாழுமெந்தன்தெய்வலாலி
௨. அந்தலாலியெந்தன்சுத்தலாலி அம்பலத்திலாடுகின்றசித்தலாலி
௩. இராஜலாலிநடராஜலாலி இராஜசபையோங்குநதிவ்வியதேஜலாலி
௪. வேதலாலிசுகீதலாலிவேதமுடிவாழுமெந்தன்போதலாலி.

## பூலாசெண்டு.

செண்டாடிடுவோமசிற்சபையப்பன்தன்னெடுகண்டார்மகிழ்வுற
விண்டார்புகழுறக்கருதியம்பலப்பெருவெளியில்
...ண்டாயாதான்கர்த்தனையெங்களத்தனையேவிண்ணுடர்சிலர்
...ணுடர்பலர்மருங்கிலெங்கனுநெருங்கிடவே

வேதாந்தவீட்டிலுறைவித்தகனெங்களத்தனேயோதாந்தசுக
போதாந்தர்மிகநாடிவியந்துபுகழ்ந்திடவே
சீர்பெருகுஞ்சிவகாமிசிறந்துநின்றுதான்புகழும்
சித்ரூபபெருசத்ரூபக்குருசற்ஜனரக்ஷகாதன்னுடனே

## நாயகன்சொல் பத்தியம்.

அழகான அன்னமேஆசைக்கலாபமே
ஆனந்தவல்லிபிம்பஅம்புஜாக்ஷி
பழகாதபாவையேபழவகையினசாரமே
பசியாதவமுதமேபரமசுகமே
ஒழுகாதமதுரமேஒளிவீசும்ரத்தினமே
ஒண்டொடியாதிலகமேஓதுங்குயிலே
வழுவாதவாசையால்வாடுகின்றேனையாளுமே
வந்தாயென்மீதிலவருத்தமேனோ
மழுவாளநாதனுமேவாட்டுகின்றான்
மாலவேலிலபட்டுமிகமயங்குகிறேனே
பழுதிலாப்பவளமொழிபைந்தமபுநீயே
பரிந்தென்னைப்பாலப்பாப்பசிபோக்கியே

## நாயகிசொல் பத்தியம்.

என்னுயிராகநீயென்னிருகண்மணியே
என்னுருவநகஸாக்கவுமின்பநீயே
அன்பரியப்பிரமதேனனைபாளுடருளுபுக்ஷமோ
ஆனந்தநாதனிக்குமமலநீயே
கன்னிகைப்பருவத்திற்காலபிடித்தாக்கியே
காதலிப்பருவங்கைபிடித்தவனெயே
உன்னருமைநாதனுள்ளதமனேயுனையானா
முலங்கமொளங்கினுமவேறுகாணேனோ
என்னருமைநாதனிந்தவெக்தன்கோவே
ஏழையனவாட்டமிலாதகற்றுந்தேவே
பன்னருமவாசகந்தான்பகாவதென்னே
பரிந்தென்னைபாலுகமேபரமநிதியே.

## கதவுதிறக்கும்பாடல்

க. அம்பலத்தாடுமோரழகனொன்றுமனையருபதி
ஆசைபாய்மாலையிட்டேன்காணுமைபா
உ. மாலையிட்டதாலேநீமாலைவிடமேன்மையாய்
மாசிலாதோங்குருப்பெண்ணே - நீயும்மாசிலா
ந. மாசெனவென்றனுக்கு மாதவன்றங்கையெனும
மகிமையையோசித்துப்பாரு - சாமிநீர்தான்
ச. பார்ப்பதுவென்னேடிபாராளத்தோன்றூனும்
பறப்பண்டிபிரளயத்திற்பெண்ணே - அவன்பற

௫. பிரளயத்திலெல்லோருங்கசிப்பதுபோலவர்
கசிப்பதுமியல்பேகாண்ஐயா - அவாகசிப்பது

௬. காணுவாயென்னுயிரன்பனுமார்க்கண்டன்
காணவேமால்கோடிவீழ்ந்தான்பெண்ணே - காண

௭. வீழ்ந்தவாதனக்குமுன்வெட்கியேகின்றீரே
வீம்பென்னவுமக்குமேசொல்லும் - ஐயா

௮. சொல்லுவதென்னேடிசொன்னசொற்றவராத
சொயஞ்சோதியாதலாற்பெண்ணே - யானு

௯. ஆலிலைமேலமரண்ணலைச்சோதியென
அறிஞர்கள்சொல்லுவதேனையா - மிக அறி

௰. ஏனென்றுகேளடியெந்தனுருதனைக்காண
ஏனமாய்ச்சென்றானே அண்ணன்பெணணே.

## சிவநாமாவளிகள்.

௧. சிற்சபைவாழுஞ்சின்மயனேசிவகாமிமகிழுந்தன்மயனே
௨. கண்ணனுக்கருளியகலைமணியேகனகசபையாடுமவிணமணியே[மே
௩. குஞ்சிதபாதத்தைக்கூடுவமேகுறைகளெலாஞ்சொலவிப்பாடுவ
௪. தூரியதலத்தமரொந்துணையேதுரியதலமேவுயெனக்குணையே
௫. கொக்கிறகணிந்தருள்கொற்றவனேகக்கனைனபடுகழ்ந்தற்றவனே
௬. அம்பரதேகாபகதேவா அருளமுதீயசிவாவாவா
௭. சிற்சபையப்பாவாவாவாசிவகாமிகணவாவாவாவா
௮. கநதனைதந்தோய்வாவாவா கருணைக்கடலேவாவாவா
௯. நித்தியானந்தாவாவா வாநிர்மலதேகாவாவாவா
௰. அமபலபோதாவாவாவா அண்டாகணுதாவாவாவா
௰௧. முப்புரமெரித்தோய்வாவாவா மூவுருத்தரித்தோய்வாவாவா

வேறு.

௰௨. என்னையாண்டுகொண்டநின்னையென்னவென்றுசொல்லுவென்
பொனைனையென்றநின்றன்வண்ணம்யென்றுவந்துபுல்லுவேன்

௰௩. அத்தநின்னைநித்தம்வந்துபக்திசெய்துஅண்டுவேன்
சித்திதந்துமுத்திதந்தாறசின்மயத்தைஒண்டுவேன்

௰௪. கல்லைவென்றவென்றநெஞ்சைகரைக்குநல்லசித்தனே
தில்லைமன்றினின்றேயாடுநேதேவதேவசுத்தனே

௰௫. சங்கராசிவசங்கராசிவசங்கராசிவசங்கரா
அங்கணுபெருமபொங்கராவணிகங்கணுஅநிசுகலங்கணு

௰௬. தந்தையேமுனமவந்தையேஇதுவிந்தையேகதிமதிதந்தையே
௰௭. ஆதியேவுமைபாதியேஎந்தன்நீதியேயிகபரஆதியே.

முற்றும்.

# ப்ரம்மவித்யா.

இப்பத்திரிகையானது சிதம்பரம் ப்ரம்மவித்யா [illegible] அச்சியந்திரசாலையினின்றும் மாதமிருமுறை பிரசுரிக்கப்பட்டு நாளது [illegible] வருடகாலமாய் நடைபெற்று வருகின்றது. இதிலே வேத உபநிஷத்துக்களாமான சித்தாந்தங்களும், இந்துமதக்கிரந்தங்களின் வரலாறுகளும், சித்தாந்த முதலிய மதங்களின் சாரங்களும், புராண இதிஹாஸங்களின் உட்கருத்துக்களும், இன்றியமையாத இலௌகிக விஷயங்களும் (கிரந்த எழுத்தில்) ஸம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இருபாஷைகளிலும் எழுதப்படும்.

**கையொப்பவிவரம்.**

| | | | |
|---|---|---|---|
| வருஷம் 1 - க்கு | 2 | 12 | 0 |
| மாதம் 6 - க்கு | 1 | 8 | 0 |
| மாதம் 3 - க்கு | 0 | 11 | 0 |

இப்பத்திரிகைக்குக் கையொப்பக்காரர்களாகச் சேர விரும்புவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம். இங்ஙனம்,

(க) ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள்,
ப்ரம்மவித்யா பத்திராதிபர், சிதம்பரம்.

---

ஸ்ரீகாழிப்பெருமான்

## திருக்கழுமலமும்மணிக்கோவை.

இஃது சிவனடியார்களுள்ளே மிகச்சிறந்தவராகிய பட்டணத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பதினொராந் திருமுறையில் அடங்கியது. இதுவரையில் அச்சிடப்பட்ட பதினொராந் திருமுறைப் பதிப்பிலே திருக்கழுமல மும்மணிக்கோவை செய்யுள்கள் முழுதும் அச்சிடப்படாமையால் பன்னிரண்டு செய்யுள்கள் மாத்திரம் அச்சிடப்பட்டிருக்கின்றன. இப்பொழுது [illegible] செய்யுள்களுஞ் சேர்த்து அச்சிடப்[illegible]ன.

[illegible]